# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097197

1. District : மாவட்டம் MADURAI | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 1 | Date: நாள் 21.01.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: Section 7 of PC
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by | Sections பிரிவுகள்: Act 1988 as amended
   (iii) Act சட்டம்: P.C. (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: by PC (Amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் — | Date to : நாள் வரை 18.01.2019
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் — | Time to : நேரம் வரை Prior to 19.45 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.01.2019 | Time : நேரம் 19.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.01.2019 | Time : நேரம் 17.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Type.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o THE SUB REGISTRAR.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி EZHUMALAI, PERAIYUR TALUK, MADURAI DISTRICT / SOUTH WEST 55 KM.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S — District —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant / ~~Informant~~ (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. R. TIRUMALAI | (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் RAMAKRISHNAN
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் THASILDAR | (g) Address : முகவரி DEPUTY INSPECTION CELL OFFICER, MADURAI.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   T. P. RAJKUMAR, Age, 54/2019, S/o Pandian, Assistant, I/c Sub-Registrar Ezhumalai, Peraiyur Taluk, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   This case was registered after getting the instruction from the Superior officers and the Legal Advisor, VAAC, Chennai and hence no delay.

GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Two seperate sheets in Page Nos. 3 to 6 were enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ T. SURIYAKALA Rank INSPR. CDR. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Sent by RPAD.

[signature] 21/01/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21/01/2019 at 18.30 Hrs.

Name: பெயர் A. AMBROSE JAYARAJ.
Rank: நிலை Inspector ……No. எண் V.XPC/Madurai

கடந்த 19.01.2019-ம் தேதி நான் (அ.அம்புரோஸ் ஜெயராஜா), மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்தபோது, திரு.R.திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை அவர்கள், ந.க.எண். ஐ1/1006/2019 நாள் 19.01.2019 -ன் கீழ் அளித்த புகார் மனுவை மதுரை ஊ.த.க. பிரிவு, துணை கண்காணிப்பாளர் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு என்னிடம் கொடுத்த மேற்படி புகார் மனுவையும், பணம் ரூ.3,71,000/- மற்றும் எழுமலை சார்-பதிவாளர் அலுவலக ஆவணங்களையும் பெற்று பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விவரம் பின்வருமாறு :

அனுப்புநர் திரு.R.திருமலை,துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண். ஐ1/1006/2019 நாள் : 19 .01.2019 அய்யா, பொருள் : திடீர் இணை ஆய்வு - 18.01.2019-ம் தேதியன்று மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், எழுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் இணை ஆய்வில் கையூட்டு பணம் ரூ.3,71,000/- கைப்பற்றப்பட்டது - திரு.ப.ராஜ்குமார், உதவியாளர், சார்பதிவாளர் (பொ), எழுமலை என்பவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுதல் - தொடர்பாக. பார்வை : திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 18.01.2019.

18.01.2019-ம் தேதியன்று நேற்றைய தினம் கிடைத்த ரகசிய தகவலின் படி மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம், எழுமலை சார்-பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றும் திரு.ப. ராஜ்குமார் என்பவர் சார்-பதிவாளர் பொறுப்பில் பணியாற்றுவதாகவும், அங்கு பதிவு செய்யப்படும் பத்திரங்களுக்கு பத்திரப்பதிவு எழுத்தர்கள் மூலம், சம்மந்தப்பட்ட பொதுமக்களிடம் லஞ்சத் தொகை பெறுவதாகவும், அலுவலக நேரம் முடிந்த பின்னர் அன்றைய பதிவுகளுக்குரிய லஞ்சத் தொகையை அந்தந்த பத்திர எழுத்தர்களிடம் மொத்தமாகப் பெற்றுச் செல்வதாகவும் கிடைத்த தகவலின் பேரில் நேற்று 18.01.2019-ம் தேதி இரவு சுமார் 19.45 மணியளவில் எழுமலை சார்-பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் நுழைந்து அங்கு பணியிலிருந்த சார்-பதிவாளர் (பொ) திரு.ராஜ்குமார் அவர்களிடம் அறிமுகம் செய்த பின்னர் அந்த அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது அங்கு சார்-பதிவாளர் இருக்கையில் அமர்ந்து அலுவல் கவனித்துக் கொண்டிருந்த திரு.ராஜ்குமார் அவர்கள் எழுமலை சார்-பதிவாளர் திருமதி.கிருஷ்ணம்மாள் அவர்கள் விடுப்பில் சென்று விட்ட காரணத்தால், தானே சார்-பதிவாளர் பொறுப்பிலிருந்து அலுவல் கவனித்து வருவதாகவும், அருகிலிருந்த தனது மகன் திரு. பிரதீப் அதே அலுவலகத்தில் கணிணி விவரப் பதிவாளராக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதாகவும், திரு. அன்பரசு என்பவர் அலுவலக உதவியாளராகப் பணியாற்றுவதாகவும் தெரிவித்தார். அவர்களைத் தவிர வேறு ஊழியர்கள் யாரும் அங்கு பணியில் இல்லை என்று திரு. ராஜ்குமார், தெரிவித்தார். தொடர்ந்து, மேற்படி அலுவலக உதவியாளர் திரு. அன்பரசன் என்பவரை சோதனையிட்டதில், அவரது சட்டைப்பையில் பணம் ரூ.370/- இருந்தது. அவர் அதனை தனது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், திரு.ராஜ்குமாரின் மகனும், கணிணி விபர பதிவாளருமான திரு. பிரதீப்பை சோதனையிட்டதில், அவரது சட்டைப்பையில் பணம் ரூ.285/- இருந்தது. அவர் அதனை தனது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணமும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும், மெயின் ஹாலில் இருந்தவர்களை விசாரித்த போது திரு. முருகேசன், த/பெ. சோமசுந்தரம் என்பவர் தான் பதிவு பெற்ற ஆவண எழுத்தர் என்றும், தான் 6 பத்திரங்களை பதிவு செய்ததாகவும், அவற்றை பெறுவதற்காக சற்று முன்னர் அலுவலகம் வந்ததாகவும் கூறினார். அவரை சோதனையிட்டதில், அவரிடம் ரூ.540/- இருந்தது. அது குறித்து கேட்ட போது, அதனைத் தனது சொந்தப்பணம் என்று கூறியதின் பேரில் அந்த பணம் திரு. முருகேசனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும், ஹாலில் இருந்த திருமதி. மா. விஜயலெட்சுமி, க/பெ. மாரியப்பன் என்பவர், தனது கணவர் திரு.மாரியப்பன் (லேட்) பதிவு பெற்ற ஆவண எழுத்தராக இருந்தார் என்றும், அவர் இறந்த பின்பு, தானும் தனது உறவினரான வாசிமலை என்பவரும் பத்திரம் எழுதி கொடுக்கும் அலுவல் செய்து வருவதாகவும், தான் 8 பத்திரங்களை பதிவு செய்ததாகவும், அவற்றை பெறுவதற்காக சற்று முன்னர் அலுவலகம் வந்ததாகவும் கூறினார். அவரை சோதனையிட்டதில், அவரது மணி பர்ஸில் ரூ.42,700/- இருந்தது. அது குறித்து கேட்ட போது, அது தனது சொந்தப்பணம் என்று கூறியதின் பேரில் அந்த பணம் திருமதி.விஜயலெட்சுமியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருடன் வந்திருந்த அவரது மகள் திருமதி. மா. மோகனப்பிரியா, த/பெ. மாரியப்பன் என்பவரை சோதனையிட்டதில், அவரிடம் ரூ.4,320/- இருந்தது. அது குறித்து கேட்ட போது, அது தனது சொந்தப்பணம் என்று கூறியதின் பேரில் அந்தப் பணம் மோகனப்பிரியாவிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும், அங்கிருந்த திரு.ராமர், த/பெ வாசிமலை என்பவர் தான் பதிவு பெற்ற ஆவண எழுத்தர் என்றும், தான் 5 பத்திரங்களை பதிவு செய்ததாகவும், ஒரு பத்திரம் மட்டும் நிலுவையில் இருப்பதாகவம், பதிவு செய்த பத்திரங்களை பெறுவதற்காக சற்று முன்னர் அலுவலகம் வந்ததாகவும் கூறினார். அவரைச் சோதனையிட்டதில், அவரிடம் ரூ.50/- இருந்தது. அது குறித்து கேட்ட போது, அது தனது சொந்தப்பணம் என்று கூறியதின் பேரில் அந்தப் பணம் திரு. ராமரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து, பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த கணிணிப் பதிவை திரு.பிரதீப் மூலம் பிரின்ட் அவுட் எடுத்துப் பார்வையிட்டதில், நேற்று 18.01.2019-ம் தேதி ஆவண எண் 39/2019 முதல் 64/2019 வரை மொத்தம் 26 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதும் மற்றும் ஒரு பத்திரம் மட்டும் பதிவு செய்யப்படாமல் நிலுவையிலும் இருந்தது. மேற்படி 26 பத்திரங்களை பதிவு செய்ததற்கான "அ" பதிவுக்கட்டணம் ரூ.25,000/-ம், "பிரிவு 41"-ன் படியான முத்திரை கட்டணம் ரூ.42,652/-ம், குறுந்தகடு கட்டணம் ரூ.1,000/-ம், உட்பிரிவு கட்டணம் ரூ.3,000/-ம் ஆக மொத்தம் ரூ.71,652/- பெறப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பதிவு செய்யப்பட்ட 26 பத்திரங்களில் 20 பத்திரங்களுக்கு மட்டும் குறுந்தகடு கட்டணம் தலா ரூ.50/- ரொக்கம் செலுத்தியதாக உள்ளது. மீதம் உள்ள 7 பத்திரங்களுக்கான குறுந்தகடு கட்டணம் தலா ரூ.50/- வீதம் மொத்தம் ரூ.350/- ஆன்லைன் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தம் அரசு கட்டணம் ரூ.71,652/- கணிணிப்பதிவின் படி சரியாக இருந்தது.

தொடர்ந்து, திரு. ராஜ்குமார் அமர்ந்திருந்த இருக்கையின் வலதுபுறம் வைக்கப்பட்டிருந்த Roshan பச்சை நிற கைப்பையை சோதனையிட்டதில், அதனுள்ளே ஐந்து கத்தைகளாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்ததில் அதில் ஒரு கத்தையில் ரூ.1,43,000/- இருந்தது. அதனைச் சுற்றி வைத்திருந்த பேப்பரில் வாசிமலை (1) 39/19 - 20,000/-, (2) 47/19 - 3,000/-, (3) 48/19 - 20,000/-, (4) 49/19 - 20,000/-, (5) 50/19 - 20,000/-, (6) 52/19 - 30,000/-, (7) 56/19 - 20,000/-,

(8) 58/19 - 10,000/-, (9) 61/19 - 20,000/- மொத்தம் ரூ.1,53,000/- என எழுதப்பட்டிருந்தது அதில் (8) 58/19 - 10,000/- மட்டும் பேனாவால் கோடிட்டு அடிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கத்தையில் ரூ.95,000/- இருந்தது. அதனைச் சுற்றி வைத்திருந்த பேப்பரில் முருகேசன் (1) 43/19 - 10,000/-, (2) 51/19 - 15,000/-, (3) 53/19 - 20,000/-, (4) 55/19 - 20,000/-, (5) 57/19 - 10,000/-, (6) 59/19 - 20,000/- மொத்தம் ரூ.1,05,000/- என ஊதா நிற மையில் எழுதப்பட்டு ரூ.95,000/- என கறுப்பு பேனாவால் திருத்தப்பட்டிருந்தது. மூன்றாவது கத்தையில் ரூ.45,000/- இருந்தது. அதனைச் சுற்றி வைத்திருந்த பேப்பரில் ராமர் (1) 60/19 - 10,000/-, (2) P1/19, (3) 62/19, (4) 63/19, (5) 64/19 - 50,000/- மொத்தம் ரூ.60,000/- என எழுதப்படடிருந்தது. நான்காவது கத்தையில் ரூ.80,000/-மும், ஐந்தாவது கத்தையில் ரூ.8,000/-மும் இருந்தது.

மேற்படி தொகை குறித்து திரு. ராஜ்குமாரிடம் கேட்ட போது அவை பத்திர பதிவு செய்ததற்காக பெற்ற லஞ்சப் பணம் என ஒப்புக்கொண்டார். தொடர்ந்து திரு. ராஜ்குமார் அவர்களைச் சோதனையிட்டதில், அவரது சட்டைப்பையில் பணம் ரூ.600/- இருந்தது. அவர் அதனை தனது சொந்தப்பணம் என்று கூறியதால், அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்தில் பயன்பாட்டில் இருந்த தனி நபர் பணப் பதிவேட்டை பார்வையிட்டதில் அதில் 18.01.19-ம் தேதியன்று எவ்வித பதிவும் இல்லை. எனவே, சார்-பதிவாளர் பொறுப்பிலிருந்து கொண்டு, பத்திரப் பதிவு செய்வதற்காக பலரிடமிருந்து அரசு கட்டணம் நீங்கலாக திரு. ராஜ்குமார் லஞ்சமாகப் பெற்று தனது கைப்பையில் வைத்திருந்த மேற்படி மொத்தப்பணம் ரூ.3,71,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்து ஓராயிரம் மட்டும்) கைப்பற்றப்பட்டது. மேலும், தொடர் விசாரணைக்காக கீழ்கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. 1) எழுமலை சார்பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்புப் பதிவேடு 01.01.2019 முதல் ------ வரை 2) எழுமலை சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு, 01.01.2019 முதல் ------ வரை 3) Account – A பதிவேடு 4) ரேகை பதிவேடு 18.12.2018 முதல் ---- வரை 5) எழுமலை சார்பதிவாளர் அலுவலக தன் பதிவேடு 01.01.2019 முதல் --- வரை 6) எழுமலை சார்பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு மற்றும் ஈடு செய்யும் விடுப்பு பதிவேடு 01.01.2019 முதல் --- வரை 7) தணிக்கை வருகை பதிவேடு 01.01.2019 முதல் ---- வரை 8) எழுமலை சார்பதிவாளர் அலுவலக தாமத வருகை பதிவேடு 01.01.2019 முதல் ---- வரை 9) எழுமலை சார்பதிவாளர் அலுவலக இயக்க பதிவேடு 01.01.2019 முதல் ---- வரை 10) எழுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2019 Month January Account A Ezhumalai Date From 18-Jan-2019 To 18-Jan-2019. 11) எழுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2019 Month January Section 41 Account Ezhumalai Date From 18-Jan-2019 To 18-Jan-2019. 12) எழுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2019 Month January Sub Division Account Ezhumalai Date From 18-Jan-2019 To 18-Jan-2019. 13) வெள்ளைத்தாளில் முருகேசன் என குறிப்பிட்டு 6 பத்திர எண்கள் மற்றும் தொகை ரூ.95,000/- என எழுதப்பட்ட குறிப்புத்தாள் 14) வெள்ளைத்தாளில் வாசிமலை என குறிப்பிட்டு 9 பத்திர எண்கள் மற்றும் தொகை ரூ.1,53,000/- என எழுதப்பட்ட குறிப்புத்தாள் 15) வெள்ளைத்தாளில் ராமர் என குறிப்பிட்டு 5 பத்திர எண்கள் மற்றும் தொகை ரூ.60,000/- என எழுதப்பட்ட குறிப்புத்தாள்.

மேற்படி திடீர் இணை ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட திடீர் ஆய்வு குறிப்புரை, நாள் 18.01.2019, கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.3,71,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்து ஒராயிரம் மட்டும்) மற்றும் மேற்குறிப்பிட்ட ஆவணங்களையும் இத்துடன் இணைத்து பத்திரம் பதிவதற்காக பொதுமக்களிடமிருந்து சட்ட விரோதமாக லஞ்சம் பெற்ற திரு.ப.ராஜ்குமார், உதவியாளர், சார்பதிவாளர் (பொ), எழுமலை என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஒப்படைக்கிறேன். (ஒ-ம்) இரா.திருமலை, 19.01.2019, (R.திருமலை)துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 18.01.2019. 2) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள். 3) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். 4) ரொக்கத் தொகை ரூ.3,71,000/-. Sir, Received. (s-d) M.Sathyaseelan, 19.01.xix. DSP, V&AC, Madurai. 19.01.XIX / 12.00hrs. Inspector Tr.Ambrose Jayaraja to register a case and to handover the FIR and connected files to Inspr.Tmt. Suriyakala. For further investigation (s-d) M.Sathyaseelan, DSP, V&AC, Madurai, 19.01.XIX.

Sir, received the petition on 19.01.2019 at 13.00 hrs., and registered a case in Madurai V & AC Cr. No. 1/2019 u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018. (s-d) A.Ambrose Jayaraja, 21.01.2019, Inspector, V & AC, Madurai.

The original FIR is submitted to the Hon'ble Special Judge, The Special Court for the Trial of Prevention of Corruption Act Cases, Madurai and copies were sent to the officers concerned.

21/01/19

(A. AMBROSE JAYARAJA)
INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI.